முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த

# மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஆடி மாதம் 07 திகதி முதல்

சோபகிருது வருடம் ஆடி மாதம் 14 திகதி வரை

(23.07.2023 ஞாயிறு முதல் 30.07.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அண்ணலாக வந்த ஞானியே
அறமோடு ஞான ஆட்சி
மண்ணுலகம் அடைய வேண்டி
மாதவம் தருமம் புரிந்த தவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தானுன் பெருமைதனை கூறி
அவனியில் இந்தியா தமிழகத்தில்
அறிவிப்பேன் சோபகிருது ஆடித்திங்கள்
3. திங்களிலே சப்தம திகதிமேல் முன்னான்கீர் திகதிவரை
தெரிவிப்பேன் நடக்கும் நிகழ்வாக
இங்கனமே வருங்கால பலன்குறித்த ஆசி
இயம்பிடுவேன் அகத்திய மகரிஷி யானும்
4. யானுரைக்க ஆளுமை சக்திகள்
எளிமைபட பாமரர்க்கும் தேவை
தானாகப் பூர்த்திபடும் வண்ணம்
தக்க அரசாட்சிதனை புரிய
5. புரியவே எங்கும் மகாசக்திகள்
புண்ணியபலமாக ஞானவடிவாக
தெரியவே இறங்கி வளர்ச்சிக்கான
தொண்டாக எங்கும் மாறி சிறக்கும்
6. சிறக்கவே அரங்கமகா ஞானியரின்
சீடர்களென அடையாளம் கொண்ட
அறத்தின் பலம் கண்டநல்
அனைவருக்கும் வாய்ப்பாக வருங்காலம்

7. காலமதில் ஆளுமைத் தொடர்பு
கட்டாயம் இந்தியா தமிழகத்தின்
காலத்தை நிர்ணயிக்கும் வண்ணம்
கனிவேலவன் ஆசிபட மாற்றம்
8. மாற்றம் கண்டடைய நேரும்
மார்க்கமுடன் ஆளுமை சக்திகள்
ஆற்றல்பட பொதுநலம்பட சேவை
அனைவரையும் சமமாய் நடத்தியே
9. நடத்தியே தருமஞான ஆட்சி
நன்மைபுரிய இந்தியா தமிழக ஆளுமை
இடரின்றி செயல்வடிவம் காண
இந்தியா தமிழகம் வளர்ச்சிதனை
10. வளர்ச்சிதனை உலகே வியக்க
வல்லரசாக ஞான பூமியாக
தளர்வின்றி மாற்றம் கண்டடையும்
தவராஜன் நோக்கமாக நிறைவேறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆடி மாதம் 07ம் நாள் 23.07.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 14ம் நாள் 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

ஆதி ஞானத்தலைவனாக முருகப்பெருமானின் அம்சமாக அவதரித்திட்ட மகாஞானியே உலகினில் தர்மத்துடன் கூடிய ஞான ஆட்சி அமைந்திட வேண்டியே மாதவமும் அளவிலாத தருமமும் புரிந்திட்ட மகா தவசியே ஆறுமுக அரங்க மகானே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே இந்தியா தமிழகத்தில் சோபகிருது வருடம் ஆடி மாதம் 07ம் நாள் 23.07.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 14ம் நாள் 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டை ஆள்பவர்கள் எளிமையுடன் நடப்பதுடன் பாமர மக்களுக்கும் உண்டான தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலே திட்டங்களை செயல்படுத்தி ஆட்சி புரிந்திட்டால் நாடெங்கிலும் மகா சக்திகள் இறங்கி புண்ணிய பலத்தை பெருக்கி ஞானவடிவமாக மாறி நாடெங்கிலும் வளர்ச்சி பெருகி மக்கள் தொண்டாக மாறி நாடே சிறப்படையுமப்பா.

ஆறுமுக அரங்க மகானின் சீடர்களாக அடையாளம் பெற்றவர்கள் எல்லாம் அறம் செய்து தர்மபலம் மிக்கவர்களாக ஆகிடுவர். தர்மபலம் மிகுந்த அவர்களது வருங்காலம் எல்லாம் அவர்கட்கு நல்ல வாய்ப்புகளை உலகினில் உண்டாக்குமப்பா.

ஆட்சியர்கள் ஞானிகள் மீது நம்பிக்கை கொண்டு ஞானியர்கள் தொடர்பில் இருந்தால் உறுதியாக தமிழகத்தில் முருகப்பெருமானின் ஆசியுடன் அற்புதமான மாற்றங்கள் உண்டாகுமப்பா.

ஆட்சியர்கள் ஆற்றலுடன் தர்மத்தின் மீது நம்பிக்கை கொண்டு எல்லா மக்களையும் சமமாக பாவித்து பொதுவில் நின்று பொதுநலத்துடன் செயல்பட்டால் இந்தியா தமிழகம் அபரிமிதமான வளர்ச்சியை உலகமே கண்டு வியக்குமாறு வளர்ந்து வல்லரசாக, ஞானம் மிக்க ஞான பூமியாக மாற்றம் அடையும் அரங்க மகானின் அவதார நோக்கமும் பூர்த்தியாகுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–